**தேசிய செய்திகள்**

**உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி தொடக்கம்.**

- **செப்டம்பர் 9 2023** அன்று தேசிய தலைநகரமான **புதுதில்லியில்** நடைபெற்றுள்ள G20 தலைவர்கள் உச்சிமாநாட்டில் **இந்திய பிரதமர் மோடி உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியை** அறிமுகப்படுத்தியுள்ளார்.
- உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியானது, **நிலைத்தன்மை** மற்றும் **தூய்மையான** மற்றும் **நம்பகரமான** ஆற்றலை நோக்கிய நமது தேடலில் ஒரு முக்கியமான பகுதியாக விளங்குவதை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விரைவில் இந்த கூட்டணியானது தகுந்த சூழலுக்கு ஏற்ப உலகின் நிலைத்தன்மைக்கான **விழிமுறைகளை உருவாக்கும்** என மாநாட்டில் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் உயிரி எரிபொருளை ஏற்றுக்கொள்வதற்கு வசதியாக பல்வேறு **நாட்டு அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள்** மற்றும் **தொழில்துறையின் கூட்டணியை** உருவாக்குவதற்கான இந்தியா தலைமையிலான முக்கிய முன்முயற்சி இந்த கூட்டணி என்பது சிறப்பு வாய்ந்ததாகும்.

**இரண்டு நிதியாண்டு மேம்பாட்டுகளுக்காக PFC உடன் REC ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.**

- **2023-24** மற்றும் **2024-25** நிதியாண்டுகளுக்கான **மத்திய பொது நிறுவனங்களின் மேம்பாட்டு** - **DPE செயல்திறன் மதிப்பீட்டு** முன்னெடுப்பு முறையின்படி **PFC** நிறுவனமானது **REC** அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்(MoU) கையெழுத்திட்டுள்ளது.
- REC அமைப்பின் தலைவர்(CMD) **விவேக் குமார் தேவாங்கன்** முன்னிலையில் இந்த ஒப்பந்தங்களானது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகும். இதன் படி 2023-24 நிதியாண்டில் கிட்டத்தட்ட **ரூ. 469.35 பில்லியன்** மற்றும் **2024-25 நிதியாண்டில்** சுமார் **ரூ. 563.22 பில்லியன்** மதிப்பிலான செயல்பாடுகள் மூலம் **நிறுவன வருவாயை உருவாக்குவதை** நோக்கமாக கொண்டு REC இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாகும். REC **மகாரத்னா** பிரிவை சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். PFC மற்றும் REC இரண்டும் **இந்திய அரசின் மின்சக்தி அமைச்சகத்தின்** நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

**ONDC அமைப்பானது கேரள போக்குவரத்து துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.**

- **டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த நெட்வொர்க் அமைப்பானது(ONDC),** நாட்டின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான துறையின் **(DPIIT),** ஒரு முக்கிய முன்னெடுப்பாக **மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம்** மற்றும் **கேரள அரசின் போக்குவரத்துத் துறையுடன்** ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை(MoU) மேற்கொண்டுள்ளது.
- கேரள அரசின் சார்பில் **போக்குரவரத்து அமைச்சர்** மற்றும் ONDC அமைப்பின் சார்பில் **ஜோஷி** (CBO) ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒத்துழைப்பானது **2019** ஆம் ஆண்டில் **KOMN** உடன் தொடங்கப்பட்டதன் **விரிவாக்கம்** என குறிப்பிடப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் ஒருங்கிணைப்பு, எந்த தடையும் இல்லாமல் உள்ளடக்கிய மற்றும் அணுகக்கூடிய **இயக்க சுற்றுச்சூழல் அமைப்பை** உருவாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இணயத்தள ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராய நெக்ஸ்ட் ஜி அலையன்ஸ் மற்றும் பாரத் 6ஜி அலையன்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- **இந்தியா** மற்றும் அதன் சார்ந்த பகுதிகள் மற்றும் உலகின் பிற பகுதிகளில் உள்ள **6ஜி கம்பிவடமற்ற தொழில்நுட்பங்களில்** அனைத்து நிறுவன ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்காகவும் மற்றும் அதனை மேம்படுத்துவதற்காகவும் **நெக்ஸ்ட் ஜி அமைப்பு** மற்றும் **பாரத் 6ஜி அமைப்பு** இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- **ATIS இன் நெக்ஸ்ட் ஜி அலையன்ஸ்** தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி **சூசன் மில்லர்** மற்றும் **பாரத் 6ஜி அலையன்ஸ்** தலைவர் **என்.ஜி. சுப்ரமணியம்** ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டின் பொதுவான **6G பார்வையை ஆதரிக்கும் ஆராய்ச்சி** மற்றும் **மேம்பாட்டு முன்னுரிமைகளை சீரமைப்பதற்கும்** பாதுகாப்பான மற்றும் நம்பகரமான **தொலைத்தொடர்புகள்** மற்றும் **விநியோகச் சங்கிலிகளை உருவாக்குவதையும்** நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகும்.

**உலகின் மிக உயரமான போர் விமான தளமானது லடாக்கில் அமைக்க திட்டம்.**

- இந்தியாவின் யூனியன் பிரதேசமான **லடாக்கில்** உள்ள **நியோமா** பகுதியில் **உலகின் மிக உயரமான போர் விமானநிலையம்** அல்லது **தளத்தை** அமைக்க உள்ளதாக **எல்லை சாலைகள் அமைப்பு(BRO) செப்டம்பர் 10** அன்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த முக்கிய மற்றும் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பு திட்டத்திற்கு **மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்** வரும் **செப்டம்பர் 12** அன்று அடிக்கல் நாட்டுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் **₹218 கோடி செலவில்** கட்டப்படும் இந்த விமான நிலயமானது லடாக்கில் **விமான உள்கட்டமைப்பை பெரிதும் மேம்படுத்துவதை** நோக்கமாக கொண்டு அமைக்கப்பட உள்ளது என **BRO அமைப்பு** தெரிவித்துள்ளது.

**இந்தியா மற்றும் சவுதி அரேபியா அரசுகளுக்கிடையில் தொழில்களின் ஆராய்ச்சி பற்றி ஆராய பல்வேறு மேம்பாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- **விவசாயம், கல்வித்துறை, தகவல் தொழில்நுட்பம், மருந்துகள், பெட்ரோ கெமிக்கல்ஸ்** மற்றும் **மனித வளம்** ஆகிய துறைகளின் **மேம்பாடு** குறித்து ஆராய **இந்தியா** மற்றும் **சவுதி அரேபியா** நிறுவனங்களுக்கு இடையே **இருபதுக்கும்** மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என **மத்திய அரசு** வெளியிட்டுள்ள சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இதில் **ஹெச்பி நிறுவனம், சீரம் இந்தியா நிறுவனம், விஎஃப்எஸ் குளோபல்** மற்றும் **ஐசிஐசிஐ வங்கி** உள்ளிட்ட இரு நாடுகளின் தனியார் நிறுவனங்களிடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சர்வதேச செய்திகள்

**ஒலிம்பிக் சாம்பியனான முடாஸ் கத்தார் நாட்டின் சுற்றுலாத்துறை விளம்பர தூதராக தேர்வு.**

- உலக மற்றும் ஒலிம்பிக் சாம்பியனான **முடாஸ் பர்ஷிம்** என்பவரை தனது நாட்டின் **சுற்றுலாத்துறை** சார்பில் **புதிய விளம்பர தூதராக** தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அந்நாடு வெளியிட்டுள்ள தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- **ஐந்து** உலக தொடர் சாம்பியன்ஷிப் பதக்கங்களை வென்ற **ஒரே உயரம் தாண்டுதல் தடகள வீரர்** என்ற பெருமையை இவர் சமீபத்தில் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் **செப்டம்பர் 2023 - செப்டம்பர் 2024** வரை **கத்தார் நாட்டின் சுற்றுலாவின் பிரச்சாரங்களின் புதிய முகமாக விளங்குவார்** என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாட்டின் தொழில்துறையை விரிவுபடுத்துவதற்காக அமெரிக்காவும் வியட்நாமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.**

- **இரு நாடுகள்** மற்றும் குறிப்பாக **அமெரிக்கத் தொழில்துறைக்கு** ஆதரவாக, **ஹனோ** சார்ந்த பிராந்திய பகுதிகளில் உள்ள **குறைக்கடத்தி சுற்றுச்சூழல் அமைப்பின் திறனை விரிவுபடுத்த,** மற்றும் அதனை **மேம்படுத்துவதற்காக,** குறைக்கடத்தி விநியோகச் சங்கிலிகள் தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் **அமெரிக்காவும் வியட்நாமும்** சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- **செப்டம்பர் 11** அன்று வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகை அறிக்கையில், **வியட்நாமில் வலிமையான குறைக்கடத்தி விநியோகச் சங்கிலிகளை உருவாக்குவதையும் மேம்படுத்துவதையும்** முக்கிய நோக்கமாக கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய குற்றவியல் சங்கத்தின் 23வது ஆண்டு மாநாட்டில் “டச் மீ நாட்” ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளது.**

- இந்தியாவில் உள்ள பொது இடங்களில் **மோசமான தொடுதல்** பற்றிய பரவலான பிரச்சினையை ஆராய்ந்து அதற்கான ஒரு தீர்வுகளை உள்ளடக்கிய **ஜிண்டால் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிஹேவியோரல் சயின்ஸ்** அமைப்பினால் தயாரிக்கப்பட்ட **ஆவணப்படமானது, ஐரோப்பிய குற்றவியல் சங்கத்தின் 23வது ஆண்டு மாநாட்டில்** வெளியிடப்பட்டுள்ளது.
- **மூன்று நாள்** திட்டமிடப்பட்ட இந்த மாநாட்டில் **இத்தாலி நாட்டின் புளோரன்ஸ்** நகரில் உள்ள **சர்வதேச குற்றவியல் சங்கத்தின் பொதுச்செயலாளர் பேராசிரியர் ஸ்டீபன் பார்மெண்டியரால்** இந்த ஆவணப்படமானது வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். **30-நிமிடங்கள்** கொண்ட இந்த ஆவண படமானது, **இந்தியா முழுவதும் உள்ள பொது இடங்களில் பாலியல் ரீதியாக பொருத்தமற்ற தொடுதலின் பரவலான பிரச்சனையை ஆராய்வதாக** அமைகிறது.

## மாநில செய்திகள்

**அசாமில் மகாத்மா காந்தி சிலை திறப்பு.**

- அசாம் மாநிலத்தின் முக்கிய நகரமான **கவுகாத்தியில்** உள்ள மாநில **புதிய சட்டப்பேரவையின் கட்டிட வளாகத்தில்** மதிப்பிற்குரிய **மகாத்மா காந்தியின்** சிலையை அம்மாநில முதல்வர் **ஹிமந்தா பிஸ்வா சர்மா செப்டம்பர் 11** அன்று திறந்து வைத்துள்ளார்.
- அஸ்ஸாம் மாநில சட்டப் பேரவையின் **ஐந்து நாள் இலையுதிர்காலக் கூட்டத் தொடர் செப்டம்பர் 11** அன்று தொடங்கியுள்ளது. மேலும் **கவுகாத்தியில்** புதிதாக கட்டப்பட்டுள்ள **அசாம் சட்டசபை கட்டிடத்தில்** கூட்டம் நடைபெறுவது இதுவே **முதல் முறை** என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நியமனங்கள்

**REVLON-க்கான உலகளாவிய விளம்பர தூதராக நைலியா நியமனம்.**

- உலகளாவிய புகழ்பெற்ற **நுகர்வோர் பொருட்கள் சேவை வழங்குநரான ரெவ்லான் நிறுவனமானது**, அதன் **உலகளாவிய விளம்பர தூதராக நைலியா டெவோரா** என்பவரை நியமித்துள்ளதாக தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இவர் **2024** வரை **Revlon நிறுவன விளம்பர முகப்பாக** பணியாற்றுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**லித்தியம் யுனிவர்ஸ் நிறுவனத்தின் இயக்குநராக ஜிங்யுவான் நியமனம்.**

- **லித்தியம்** ஆய்வில் கவனம் செலுத்தும் மற்றும் **ஆஸ்திரேலியாவை** தளமாக கொண்டு இயங்கும் **லித்தியம் யுனிவர்ஸ் நிறுவனத்தின்(LU7) தனி பொறுப்பு இயக்குனராக** தொழில்நுட்ப வல்லுநரான **டாக்டர் ஜிங்யுவான் லியுவை** நியமித்துள்ளதாக தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இவர் இந்த நியமனத்திற்கு முன்பாக **கேலக்ஸி ரிசோர்சஸில் நிறுவனத்தின் மேலாண்மை மற்றும் தொழிநுட்ப பிரிவு பொது மேலாளராக** பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். **30 ஆண்டுகளுக்கும்** மேலான தொழில்நுட்ப அனுபவம் கொண்ட இவர் தனது சீரிய நடவடிக்கைகள் மூலம் நிறுவன மேன்மைக்காக பாடுபடுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருதுகள்

**2022 ஆம் ஆண்டிற்கான சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதுகளின் தேர்வு பட்டியல் வெளியீடு.**

- கிட்டத்தட்ட **இரண்டு ஆண்டு இடைவெளிக்குப்** நாட்டின் சிறந்த வருடாந்திர அறிவியல் விருதான **சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதுகள்** பட்டியலானது **செப்டம்பர் 11 2023** அன்று வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு **ஏழு பிரிவுகளி**ல் விருதுகளை **12 விஞ்ஞானிகள்** பெறுவார்கள் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விருதுகளானது **உயிரியல், இயற்பியல், பொறியியல், கணிதம், வேதியியல், மருத்துவம்,** மற்றும் **பூமி அறிவியல்** ஆகிய **ஏழு அறிவியல்** துறைகளில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த விருதுகளானது **CSIR-ன் முதல் இயக்குநரான சாந்தி ஸ்வரூப் பட்நாகர்** பெயரில் ஆண்டுதோறும் வழங்கப்படுவது சிறப்பு வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## விளையாட்டு செய்திகள்

**2023 ஆம் ஆண்டிற்கான உலக வில்வித்தை கோப்பை போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது.**

- 2023 ஆம் ஆண்டிற்கான வில்வித்தை உலகக் கோப்பை தொடரின் இறுதி போட்டியில் இந்திய வில்வித்தை வீரரான **பிரதமேஷ் ஜாவ்கர்** கடும் சூழலுக்கு பிறகு தனது **வெள்ளிப் பதக்கத்தை** தக்க வைத்து கொண்டுள்ளார்.
- உலக தரவரிசையில் **14-வது இடத்தில் உள்ள** இந்திய வீரர் **ஜவ்கர்** தங்கப் பதக்கப் போட்டியில் **10-வது தரவரிசை** இடத்தில் உள்ள **டென்மார்க்** நாட்டின் **மத்தியாஸ் புல்லர்டனை** எதிர்த்து போட்டியிட்டு இந்த பதக்கத்தை தக்க வைத்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முக்கிய தினம்

**தேசிய வன தியாகிகள் தினம் 2023**

- நாட்டில் உள்ள அனைத்து **காடுகளையும்** அதன் **வனவிலங்குகளையும்** பாதுகாப்பதற்காக தங்கள் உயிரை பொருட்படுத்தாமல் **தியாகம் செய்தவர்களைக்** கௌரவிக்கவும் அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் **செப்டம்பர் 11** ஆம் நாளானது **தேசிய வன தியாகிகள் தினமாக** கடைப்பிடிக்கப்படுகிறது.
- மேலும் இது **1730** ஆம் ஆண்டு **கெஜர்லி படுகொலையின்** ஆண்டு நினைவு தினமாக பொதுவாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் இந்த படுகொலையில், கிட்டத்தட்ட **363 பிஷ்னோய் கிராம மக்கள் மரங்களை பாதுகாக்கும் போது கொல்லப்பட்டனர்** என்பது குறிப்பிடத்தக்கதாகும். **Honoring Sacrifice** என்பதை பொது கருத்தாக கொண்டு இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறதாகும்.